**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.42/19** P.W. 10

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. டாக்டர் ராம் இளவழகன் | Father's / Husband Name . ராமநாதன் | |
| Village | : | Taluk | : |
| Religion | : | Age | : |
| Date | :21.10.2019 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 21.10.2019.

**முதல் விசாரணை**.

நான் தற்பொழுது சென்னையில் உள்ள விஜயா சிடி ஹெல்த் சென்டர் வடபழனியில் ரேடியாலஜிஸ்டாக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு தஞ்சாவூர் ரோகினி மருத்துவமனையில் சிடிஸ்கேன் பொறுத்து பன்னீர்செல்வம் என்பவருக்கு தலையில் அடிப்பட்டது பொறுத்து எடுத்த சிடிஸ்கேன் குறித்து எடுத்த ரெக்கார்டுகள் எனக்கு அனுப்பபட்டது. அதை நான் பார்த்து பரிசீலித்தேன். அவருடைய இடது பக்க பெரேட்டல் எலும்பில் நேரான ஒரு எலும்பு முறிவு காணப்பட்டது. மேலும் ரிப்பீடுலர் கெமட்டோமா இடது பக்க பெரேட்டல் பக்கம் ரத்தம் உறைந்து காணப்பட்டது. அது வகைக்கு 13.9.2010ல் எடுக்கப்பட்ட சிடிஸ்கேன் அடிப்படையில் முதலில் பன்னீர்செல்வத்தின் நிலைமை குறித்து அதசாஆ.4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் அவருக்கு அந்த ரிப்போர்ட்டுக்கு பிறகு தகுந்த சிகிச்சைகள் வழங்கப்பட்டு மீண்டும் 17.9.2010 அன்று மீண்டும் சிடிஸ்கேன் எடுக்கப்பட்டுள்ளது. அதில் எக்ஸ்பர்ட் ஒப்பீனியன் நான் கொடுத்துள்ளேன். அந்த ரத்தம் உறைந்திருந்தது சிகிச்கைக்கு பிறகு குறைந்து காணப்பட்டது. மிட்லைன் சிப்ட் முன்பு எடுத்த ஸ்கேன் அறிக்கையை விட தற்போது குறைந்து காணப்பட்டது. இந்த சிமிட்டம் அடிப்படையில் அவருக்கு கபாலத்தில் ஏற்பட்ட ரத்த உறைதல் மற்றும் மிட்லைன்சிப்ட் குறைந்து காணப்பட்டது. அது வகைக்கு நான் அந்த நோயாளிக்கு ரத்த உறைதல் மற்றும் மிட்லைன்சிப்ட் ஆகியவை குறைந்து கொண்டுவருகிறது என்று நான் சான்று வழங்கியுள்ளேன். நான் வழங்கியுள்ள சான்று அதசாஆ.11ஆகும். ரத்த கசிவு கபாலத்தில் நிற்காமல் போய்கொண்டிருந்தால் நாளடைவில் அவர் கோமா நிலைக்குகூட செல்ல வாய்ப்புள்ளது. இதுவகைக்கு இடது பக்க பெராட்டல் லீனியர் எலும்பு முறிவு மீண்டும் சேர வாய்ப்பில்லை. அதை அறுவை சிகிச்சை செய்து குணப்படுத்த முடியாது. பன்னீர்செல்வத்திற்கு தலையில் இடது பக்க பெராட்டல் ரீஜியனில் எலும்பு முறிவு ஏற்பட்டதால்தான் ரத்தம் கசிந்து ரத்த உறைதல் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். இதுவகைக்கு போலிசார் விசாரிக்க விபரம் சொன்னேன்.

**எதிரிதரப்புக் குறுக்கு விசாரணை**.

அதசாஆ.11 குறித்த ரிக்கார்டுகள் ஆன்லைனில் தஞ்சாவூர் ரோகினி மருத்துவமனையில் பதிவுகளில் இருக்கும். நான் பன்னீர்செல்வத்திற்கு நேரில் வந்து நோயாளியை தொட்டுப்பார்த்து சிகிச்சை

வழங்கவில்லை என்றால் சரிதான். ஆன்லைனில் தவறாக இன்பர்மேஷன் வர வாய்ப்புண்டு என்றால் அது பற்றி கருத்து சொல்ல எனக்கு தெரியாது. டாக்டர் ரெத்தினசபாபதி கொடுங்காயமாக சித்தரித்து ரிக்கார்டுகளை அனுப்பியிருக்காலம் என்றால் அதுப்பறிற எனக்குத் தெரியாது. பன்னீர்செல்வத்திற்கு ஏற்பட்ட காயங்கள் மரத்தில் இருந்து கீழேவிழுந்தோ, விபத்தில் கீழேவிழுந்தோ, தடுக்கி விழுந்தோ ஏற்பட வாய்ப்புண்டு என்றால் அதுப்பற்றி என்றால் சொல்ல முடியாது. காயத்தின் அளவு எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இடது பெரேட்டல் ரீஜீயன் லீனீயர் பெராக்சர் பின்னிட்டு சரியாக வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புண்டு. பன்னிர்செல்வதற்கு ஏற்பட்ட காயங்கள் பொறுத்து ரத்தம் உறைந்தது குறைந்து காணப்பட்டது அந்த காயம் சாதாரண காயம் என்பதால்தான் என்றால் சரியல்ல. காயங்களே ஏற்படாமல் கூட தலையில் ரத்த உறைதல் ஏற்படலாம். காவல் துறை கேட்டுக்கொண்டதற்கு இணங்க தவறாக சாட்சியம் முன்வைக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த எலும்பு முறிவுக்கு முன்பே சாதாரணமாக ரத்த உறைதல் கபாலத்தில் பன்னீர்செல்வத்திற்கு இருந்துள்ளது என்றால் சரியல்ல. ஏன்னென்றால் தலையில் எலும்பு முறிவு உள்ளது. என்னுடைய சிகிச்சை பரிந்துரை அனைத்தும் ஆன்லைனில் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். அந்த காயங்கள் பற்றி எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது. ஆகையால் அந்த காயங்கள் மோட்டார் சைக்கிளில் இருந்து கீழேவிழுந்தாலோ மரத்தில் ஏறி இருக்கும் பொழுது மரத்தில் இருந்து கீழேவிழுந்தாலோ ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புண்டு.

மறுவிசாரணை இல்லை.